
உ
சிவ சிவ

# அன்புநெறி

மலர்-13 செப்ரெம்பர் 2008 இதழ்-02


$1.00

ஒரு கோட்டன் இருசெவியன் மும்மதத்தன்
நால்வாய் ஐங்கரத்தன் ஆறு
தருகோட்டம் பிறை இதழித் தாழ்சடையான்
தரும்ஒருவா ரணத்தின் தாள்கள்
உருகோட்டன் பொடும்வணங்கி ஓவாதே
இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திருகோட்டும் அயன்திருமால் செல்வமும்ஒன்றோ
என்னச் செய்யும் தேவே.
– சிவஞானசித்தியார் –அருணந்திசிவம்






பாதி விருத்தத்தால் இப்பார் விருத்த மாகவுண்மை
சாதித்தார் பொன்னடியைத் தான்பணிவதெந்நாளோ.
–தாயுமானவர்.



வாழ்க பாரதியின் அருமை–அதில்
வளர்க தாய்மொழியின் பெருமை,
வாழ்க வையகத்தில் யாரும்–பிணி
வறுமை அச்சமற்று வாழ்க.
– நாமக்கல் கவிஞர்

# DR. ILLANGO & ASSOCIATES

DENTAL OFFICE (OPEN 7 DAYS A WEEK)




**உங்கள் சேவை கருதி இரு இடங்களில் வாரத்தின் ஏழு நாட்களும் பல் வைத்திய நிபுணர்களின் சேவைகள்.**

## Dr. M. Illango

B. D. S, D orth (Oslo)
General Practioner Mainly Orthodontics

## Dr. S. Raveendran

B.D. S., M.S, F. D. S. R. C. S. (Eng.)
General Practioner

## Dr. Janaki Illango


B. D. S. Family Dentistry

**SCARBOROUGH OFFICE**
3852 Finch Ave. E., # 303
Scarborough, ON
**(416) 292 -7004**

**MISSISSAUGA OFFICE**
3025 Hurontario St., # 102
Mississauga, ON
**(905) 270-7844**


### வாழ்த்துகிறோம்

கனடா சைவசித்தாந்த மன்றத்தின் காப்பாளர்களில் ஒருவரும், **அன்புநெறி** சிறப்பாசிரியர்களில் ஒருவருமான மூதறிஞர் சிவத்தமிழ் வித்தகர் கலாநிதி சிவத்திரு **கணபதீசுவரக் குருக்கள் வைத்தீசுவரக் குருக்கள்** அவர்கள் செப்ரெம்பர் 22, 2008இல் அகவை தொண்ணூற்று இரண்டை நிறைவு பெறுகிறார். குருக்கள் அவர்கள் நலமுடன் நீடு வாழ்ந்து சைவத்தமிழ் பணிகள் செய்ய எல்லாம் வல்ல சிவகாமி உடனுறை ஈழத்துச் சிதம்பர நடராசப் பெருமானை வணங்கி வாழ்த்துகிறோம்.



உ

சிவ சிவ

# அன்புநெறி

| மலர் -13 | சர்வதாரி ஆவணி–புரட்டாதி, செப்ரெம்பர் 2008<br>திருவள்ளுவர் ஆண்டு - 2039 | இதழ் -2 |
|---|---|---|


**பொருளடக்கம்** **பக்கம்**


1. பாரதியாரின் பாப்பா பாட்டு பாடப்பெற்ற வரலாறு 4
2. பாரதி பாடல் . . . . . . . . . . . . 6
3. மன்றத்தில் நிகழ்ந்தவை. . . . . . . . 12
4. பக்தியுடையார் காரியத்திற் பதறார். . . . . 14
5. சிவஞானபோதச் சிற்றுரை........... . . . . 17
6. நால்வர் வரலாறு......... . . . . . . . . 19
7. சைவ சித்தாந்தம்.... . . . . . . . . . . 24
8. திருமுறைகளில் சிவஞானம். . . . . . . 28

**சிறுவர் பகுதி**

9. சுப்பிரமணிய பாரதியார். . . . . . . . . 30
10. உயிரின் நிலைமை . பின் அட்டையில்.



**ஆசிரியர் :** திருமதி வடிவழகாம்பாள் விசுவலிங்கம்

**நிர்வாக ஆசிரியர்:** திரு. தி. விசுவலிங்கம்

**உதவி ஆசிரியர்:** திருமதி அநிதா திருமுருகா

**வெளியீடு:** சைவசித்தாந்த மன்றம், கனடா


**குலச்சிறையார்**

**குருபூசை நாள்:** ஆவணி – அனுஷம்

அருந்தமி ழாகரன் வாதில் அமணைக் கழுநுதிமேல்
இருந்தமிழ் நாட்டிடை ஏற்றுவித் தோனெழிற் சங்கம் வைத்த
பெருந்தமிழ் மீனவன் தன்னதி காரி பிரசமல்கு
குருந்தவிழ் சாரல் மணமேற் குடிமன் குலச்சிறையே.

–திருத்தொண்டர் திருவந்தாதி – நம்பியாண்டார் நம்பி

**சைவ சித்தாந்த மன்றம், கனடா**
Saiva Sidhdhantha Manram, Canada 1008-50 Elm Dr. E. ,
Mississauga, ON L5A 3X2 Canada Fax/Tel (905) 566-4822
Email:- saivamanram@gmail.com



# பாரதியாரின் பாப்பா பாட்டு பாடப்பெற்ற வரலாறு

குழந்தைகள் "ஓடி விளையாடு பாப்பா" எனத் தொடங்கும் பாப்பா பாட்டினை விருப்புடன் ஆனந்தமாய்ப் பாடுவார்கள். ஒரு குழந்தை இளமையில் இருந்தே நல்ல முறையில் வளர அதன் தாய் தந்தை என்னென்ன அறிவுரை சொல்வார்களோ, அவை அனைத்தையும் பாரதியார் இப்பாட்டில் சொல்லியுள்ளார்.

ஔவையின் "ஆத்திசூடி" யையும் திருவள்ளுவரின் திருக்குறளையும் ஒருவர் தன் குழந்தைப் பருவத்தில் படிக்காமல் போயினும், அவற்றின் சாரத்தை எல்லாம் தன்னுள்ளே அடக்கியுள்ள இந்தப் பாப்பாப் பாடலை இனிமை சேரக்கேட்டு உள்ளத்தில் பதித்துக் கொண்டால் போதும், அக் குழந்தை நிச்சயம் சிறப்பான முறையில் பண்புடன் வளரும். குழந்தைகள் வாழும் முறைமையைத் தான் பாரதியார் அப்பாடலில் விளக்கி உள்ளார்.

"நமக்கு உதவி செய்து வாழும் உயிர்களிடம் அன்பு செலுத்த வேண்டும்; கூடி விளையாட வேண்டும்; பொய் சொல்லக் கூடாது; துன்பம் வந்தபோது சோர்ந்து விடக்கூடாது; சோம்பல் கொள்ளக் கூடாது; காலை எழுந்து கற்க வேண்டும்; மாலையில் விளையாட வேண்டும்; தாய் சொன்ன சொல்லைத் தட்டக் கூடாது; தமிழ்ச்சொல் உயர்வானது; தாய்நாட்டைத் தினமும் புகழ்ந்திட வேண்டும்; சாதியினால் பெருமை கிடையாது; பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லை; தெய்வம் நமக்குத் துணை நிற்கும்." – இவ்வாறெல்லாம் வாழ்க்கைக்குத் தேவையான அறிவுரைகளைப் பாரதியார் சொல்லியுள்ளார்.

இப் பாடலில் பாரதியார் சொல்லாதது எதுவுமில்லை எனலாம். எவ்வளவு எளிமையாகப் பாடி குழந்தைகளின் உள்ளங்களில் பதிய வைக்கிறார் என்பதை உணரலாம்.

பாரதியாரின் இரண்டாவது மகள் சகுந்தலாவுக்கு அப்போது நான்கு அல்லது ஐந்து வயது இருக்கும். ஒரு நாள் காலை


ஏழு மணிபோல் பத்திரிகைகளுக்கு எழுத உட்கார்ந்தார். அப்போது அவர் மனைவி செல்லம்மா சகுந்தலா பாப்பாவைக் கூப்பிட்டு அடித்துக் கொண்டிருந்தார். குழந்தை அழுதாள். குழந்தையின் அழுகைச் சத்தத்தைக் கேட்டு, "குழந்தையை ஏன் அடித்தாய்?" என்று கேட்டார்.

தான் குளிக்கக் கிணற்றடிக்குப் போய் விடும்பொழுது, குழந்தையை எவரும் கவனிக்க முடியாமல் வெளியே போய் விடுவதால், தன்னை யாரும் கவனிக்காததால் குழந்தை தெருவுக்குப் போய், எங்கேயாவது ஒரு வீட்டினுள் புகுந்து கொண்டு அந்த வீட்டுக் குழந்தையிடம் அடிபட்டுக் கொண்டு வந்து நிற்பதாகவும், தன் மனம் வேதனைப்படுகிறது என்றும், அவளைத் தேடி அலைவதும், அவள் அழுது கொண்டு வருவதும் தினமும் நடைபெறுவதாக உள்ளது என்று வருத்தத்துடன் கூறினார். பாரதியின் முதல் மகள் தங்கம்மா, அவளின் பெரியம்மாவுடன் காசியில் வளர்ந்து வந்தாள். எனவே இரண்டாவது மகள் சகுந்தலாவிடம் பாரதிக்கு அன்பு அதிகம். தன்னுடன் இருக்கும் ஒரே மகளை பாரதி எப்போதும் பிரிந்ததே இல்லை. அவளை பாப்பா என்று தான் மிகவும் அன்புடன் அழைப்பார். அவர் குழந்தையை தூக்கிக் கொண்டார். "இனி குழந்தையை நான் கவனித்துக் கொள்கிறேன். நீ குழந்தையை அடிக்காதே" என்று சொன்னார். பின் குழந்தையைப் பார்த்து, "சகுந்தலா பாப்பா! அழாதே. அம்மா இனி உன்னை அடிக்கமாட்டாள். உனக்குப் பாட்டு பாடுகிறேன், பார்" என்று பாரதி சொன்னார். அழுத குழந்தை அவரைப் பார்த்துச் சிரித்தது. அப்போது தான் பாப்பாப் பாடலைப் பாடினார். "பாப்பாப் பாட்டு" *1915* பெப்புரவரி மாத "ஞானபாநு" இதழில் வெளி வந்தது.

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே — அதைத்
தொழுது படித்திடடி பாப்பா"

"உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மை என்று தானறிதல் வேணும்!
வயிரம் உடைய நெஞ்சு வேணும் – இது
வாழும் முறைமையடி பாப்பா"

**ஆசிரியர் - தி.வி.**



## பாரதி பாடல்

(சுவாமி விபுலாநந்தர்)

மானிட வாழ்க்கையிற் பாலப்பருவம் முதற் கிழப்பருவம் ஈறாகவுள்ள எல்லாப் பருவங்களிலும் மனதுக்கு ஊக்கத்தையும், இணையில்லா உவகையையும் அளிக்கும் உண்மைப் பாடல் ஆருயிர்க்கு உறுதிபயக்கும் அமிர்தத்தை நிகர்ப்பன. குழந்தைப் பருவத்தில் தாலாட்டிக் கண்வளர்விப்பதும் பாட்டு; பாலப்பருவத்தில் ஒத்த வயதினரோடு பந்தாடல் முதலியனவற்றைப் புரியுங்கால் உள்ளத்திற் கிளர்ச்சி உண்டாக்கி மகிழ்விப்பதும் பாட்டு; வாலிபப் பருவத்தில் காதலூட்டிக் களிப்புறச் செய்வதும் பாட்டு; போர்க்களத்தில் முன்னேறி நின்று அமர்புரியும் ஆற்றலைத் தருவதும் பாட்டு; வயது முதிர்ந்த கிழப்பருவத்தில் கழிந்துபோன இளமையை ஒரோ வழி நினைப்பூட்டி மகிழ்வுறுத்துவதும் பாட்டு.

ஆற்றல் நிறைந்த செஞ்சொற் புலவர்களால் அமைக்கப்பட்ட பாடல்களுக்கு உயிர் உண்டு. வலிமையுண்டு. பிரான்சு தேசத்துக்குப் புத்துயிரளித்துச் சமத்துவம் சகோதரத்துவத்தோடு கூடிய சுயராச்சியத்தைப் பெறச் செய்தது ஓர் இன்னிசைக் கவிதையன்றோ? இமயம் முதற் குமரி ஈறாகக் கிடந்த வளம் நிறைந்த நமது தாய் நாட்டின் மீது அனைவருக்கும் அன்பு உண்டாகச் செய்து ஒன்று கூட்டி வைத்தது வங்க மொழிக் கவிவாணர் ஒருவர் பாடிய “வந்தேமாதரம்” என்னும் பாட்டன்றோ? ஊயிரற்றுக் கிடக்கும் வெற்றெலும்புக்கும் உயிரளிக்கும் ஆற்றல் பாட்டுக்கு உள்ளதாதலின் உத்தமக் கவிகளின் பாடல் நாட்டுக்குப் பெருநலத்தை அளிக்கும் நீர்மையவாம்.

இரண்டுகோடி தமிழ் மக்களுக்கும் புத்துயிரையும் புதிய ஆற்றலையும் தந்து உலகத்திலுள்ள ஏனைய மக்கள் தொகுதியினரோடு ஒப்புறவிருத்தி உயர்வினை அளிக்கும் நீர்மையவாகிய சங்கச் செய்யுட்கள் தொன்மையாதலின் கற்றோர்க்கன்றி மற்றோர்க்குப் பயன்படாவாயின. சங்கச் செய்யுட்களுள்ளே செறிந்து கிடக்கும் காதல் இன்பத்தையும் வீர மேம்பாட்டையும் யாவரும் எளிதில் உணர்ந்து கொள்ளும் பொருட்டு இலகுவான நடையிலமைந்த இன்னிசைப் பாடல்களால் சொல்லவல்ல கவிவாணர் தமிழ் நாட்டிற்குப் பேருபகாரிகள் ஆவர். இத்தகைய கவிவாணர்களுள்

முதல் வைத்து எண்ணப்படும் தகைமை சான்றவர் ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியார். தமிழ்நாடு செய்த தவப்பயனாய் உதித்த பாரதியார் தமது இன்னிசைப் பாடல்களினால் தமிழ் நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் அளத்தற்கரிய பேருபகாரத்தைச் செய்திருக்கின்றார். இவரது பாடற்றொகையாகிய கருவூலத்தினுட் புகுந்து அருமணிகள் சிலவற்றினை எடுத்துக் காட்டுவதற்கு எண்ணினோம்.

''தெளிவுறவே யறிந்திடுதல் தெளிவுதர மொழிந்திடுதல் சிந்திப்பார்க்கே
களிவளரவுள்ளத்தி லாநந்தக் கனவுபல காட்டல் கண்ணீர்த்
துளிவரவுள் ளுருக்குதலிங் கிவையெல்லா நீயருளுந் தொழில்களன்றோ
ஒளிவளருந் தமிழ்வாணி அடியனேற் கிவையனைத்தும் உதவுவாயே.''

எனப் பாதியார் கவித் தெய்வத்தைத் துதிக்கின்றார். உறுதி பயக்கும் உண்மைப் பொருளினைத் தெளிவுற ஆராய்ந்து பயக்கும் உண்மைப் பொருளினைத் தெளிவுற ஆராய்ந்தறிதல், ஆராய்ந்ததனைத் பிறர்க்குத் தெளிவு பொருந்த அறிவுறுத்துதல் நினைப்போரது உள்ளத்திலே உவகையோடு கூடிய மனோபாவங்களை உண்டாக்குதல், நெஞ்சினை உருக்கிக் கண்ணீர்த்துளி பொருந்துமாறு செய்தல். இவையெல்லாம் கலைவாணியின் அருள் திறனால் எய்துதற்குரியன. ஈண்டுக் கூறிய நலம் அனைத்தும் பாரதியாரிடம் காணப்படுகின்றவாதலின், அவர் கலைமகளுடைய அனுக்கிரகத்தைப் பெற்ற உத்தமப் புலவர் என்பதற்கு எட்டுணையேனும் ஐயமில்லை.

பாரதியாருடய பாடல்களைப் பொருள் நோக்கி ஆறுவகையாகப் பிரித்துக் கொள்ளலாம். பாரதமாதா, கண்ணன், பராசக்தி, பாரதவீரர், பாரதமக்கள், குமரவேள் ஆகிய பாட்டுடைத் தலைவரைப் பரவுகின்ற இன்னிசைப் பாடல்கள் சிலவற்றை இம்முறையே வைத்து ஆராய்வாம்.

நமது தாய்நாடாகிய பாரதநாடு ஞானத்திலும், படைவீரத்திலும், உடல்வன்மையிலும், ஆக்கத்திலும், அழகிலும் உயர்வுடைய நாடென்னும் பொருள் பெறக் கூறுகின்ற செய்யுளும், இந்நாட்டினது பெயரினைச் சொல்லுவார் வறுமையிலும் பகையினும் துன்பத்தினும் நின்று நீங்குவார் என்றெடுத்து

''வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம் – அடி
மேலைக் கடல்முழுதுங் கப்பல் விடுவோம்
பள்ளித் தலமனைத்துங் கோயில் செய்குவோம் – எங்கள்

பாரத தேசமென்று தோள் கொட்டுவோம்.''

எனக்கூறி நடக்கும் செய்யுளும்,

''மன்னும் இமயமலை எங்கள் மலையே'' என்னும் முதலினையுடைய செய்யுளும், ''முன்னையிலங்கை அரக்கர் அழிய – முடித்தவில் யாருடை வில்?'' எனத் தொடங்கும் பாடலும், பாரதமாதா நவரத்ந மாலையும், பாரதநாட்டினுடைய விரிவையும், செல்வ வளத்தையும், கல்வி நலத்தையும், பிறவற்றையும் சிறப்புறக் கூறுவன.

''சிறந்து நின்ற சிந்தையோடு தேய நூறு வென்றிவள்
மறந்த விர்த்தந் நாடர் வந்து வாழி சொன்ன போழ்தினும்
இறந்து மாண்பு தீர மிக்க ஏழ்மை கொண்ட போழ்தினும்
அறந்த விர்க்கி லாது நிற்கும் அன்னை வெற்றி கொள்கவே.''

என்னுமிச் செய்யுள் செல்வம் வரினும் வறுமை வரினும் இந்நாடு அறநெறியினின்று வழுவமாட்டாது என்னும் உண்மையைத் திறமுறக் கூறுவது, 'தமிழ்', 'தமிழ்த்தாய்', 'செந்தமிழ்நாடு', 'தமிழ்மொழி வாழ்த்து', என்னும் பொருள்பற்றி எழுந்த செய்யுட்கள் தாய் நாட்டின் மீதுந் தாய்மொழியின் மீதும் பாரதியாருக்குள்ள கரைகடந்த அன்பின் திறத்தைக் காட்டுகின்றன.

''கற்றைச் சடைமுடி வைத்த துறவியைக்
கைதொழுவாள் எங்கள் தாய் – கையில்
ஒற்றைத் திகிரிகொண் டேழுலகாளு
மொருவனையுந் தொழுவாள்.''

எனப் பாரதியார் கூறியபடி இந்நாடு தொன்றுதொட்டுத் துறவியர்க்குத் துறவியாகிய தெய்வத்தையும் அரசர்க்கு அரசாக விளங்கும் தெய்வத்தையும் வழிபட்டு வருகின்றது. பார்த்தனுக்குக் கீதை உணர்த்திய ஞானகுருவும், ஆண்டாளுக்கு அருள் புரிந்த ஆன்மநாயகனும், உன்னுவாருடைய உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்ற பேரழகனுமாகிய கண்ணன் சிவபெருமானின் வேறல்லன் என்பது ஆன்றோர் கண்ட முடிபு. பெருங்கருணைத் தடங்கடலாகிய தனிப்பெருந் தெய்வமொன்றே நாயன்மாராலும், ஆழ்வார்களாலும் சிவனெனவும் கண்ணனெனவும் போற்றப்பட்டது. பாரதியாருடைய கண்ணன் பாட்டுத் தெய்வத்தைத் தோழனாகவும், தாயாகவும், தந்தையாகவும், சேவகனாகவும், அரசனாகவும், சீடனாகவும், சற்குருவாகவும், குழந்தையாகவும், விளையாட்டுப் பிள்ளையாகவும், காதலனாகவும், காதலியாகவும், ஆண்டானாகவும்,

குலதெய்வமாகவும், வைத்துப் பரவுகின்றது. இச்செய்யுட்கள் பக்திச்சுவை ததும்புவன. சூரியஸ்தோமம், அக்கினிஸ்தோமம், சோமதேவன்புகழ், யாகப்பாட்டு, வேள்விப்பாட்டு என்றிவை வேதசம்ஹிதைகளின் நடையையும் பொருளையுஞ் சார்ந்து நிற்பன.

நெஞ்சினையுருக்கும் நீர்மைசான்ற கண்ணன் பாட்டு என்னும் கவிதைத் தொகுதியானது பாரதியாருடைய ஏனைய பாடல்களைப் போல புதிய நடையும் புதிய கருத்துக்களும் நிரம்பியுள்ளது. முதலிலே கண்ணனைத் தோழனாகக் கொண்டு பாடிய பாடல் இன்பத்திலும் துன்பத்திலும் உடனின்று உதவி புரியும் கண்ணன் நண்பினுக்கோர் களஞ்சியமாவான் எனக் கூறுகின்றது. கண்ணனுக்கு இணைபிரியாத நண்பன் யாரோ வென்னிற் காண்டீவத்தைக் கரத்திலேந்திய அருச்சுனன் என்பது. கவி தம்மை அவ்வருச்சுனனாகப் பாவித்துப் பலவாறாகக் கண்ணனுடைய தோழமையின் மாண்பினைக் கூறுகின்றார். சுபத்திரை என்னும் பெண்ணரசியைக் களவாகக் கொண்டு செல்ல உபாயம் கூறியவனும், கன்னனை வெல்லும் வழியுரைத்தவனும், கானகத்தே கலக்கமின்றி வாழச் செய்தவனும், போர்க்களத்தே தேர் செலுத்தியவனும், உடலில் நோயுற்ற காலத்தும், உள்ளத்திற் கவலையுற்றபோதும் அருள் வார்த்தை கூறி நோவகற்றியவனும், ஆறுதல் புரிபவனும், கருவங் கொண்டபோது அடித்து நல்வழிப் படுத்துபவனும், கீதை உரைத்து அன்புறச் செய்தவனும் கண்ணனேயென இப்பாடல் கூறும்.

கண்ணனைத் தாயாக வைத்துப் பாடுகின்ற பாட்டினிலே இயற்கை வனப்பு நலம்பெறச் சொல்லப்படுகின்றது. தந்தையாகக் கொண்ட பாட்டினிலே காத்தற் கடவுளின் அருட்டிறமும் வேதத்தின் மாண்பும் கூறப்பட்டிருக்கின்றது. கண்ணனைச் சேவகனாகப் பாடிய பாட்டு சேவகருடைய இயல்பையும் இன்றியமையாமையையும் ஆண்டவனை அடிமையாகக் கொண்டபேர்கள் இம்மை மறுமைச் சுகத்தைப் பெறுவாரென்பதையும் கூறுகின்றது. கண்ணனை அரசனாகப் பாடிய பாட்டு மறவொழுக்கத்தினாலும் அறவொழுக்கத்தினாலும் மண்ணகத்தைக் காவல் புரிகின்ற அரசனது மாட்சியைக் கூறுவது. மாயக் கண்ணனைச் சீடனாகக் கொண்டு தான்பட்ட கஷ்டத்தினைக் கவியெடுத்துரைக்கும் இன்னிசைச் செய்யுள் ஆண்டவனே நல்லறிவுணர்த்தும் உண்மை ஆசானாவான் என்பதைச் சிறப்புறக் கூறுவது. கண்ணனைச் சற்குருவாகப் பாடிய செய்யுள் புதியதொரு சித்தாந்தத்தை நிறுவுவது.

"சித்தத்திலே சிவநாடுவார் – இங்கு
சேர்ந்து களித்துலகாளுவார் – நல்ல
மத்தமதவெங் களிறுபோல் – நடை
வாய்ந்திறு மாந்திரிகுவார் – இங்கு
நித்த நிகழ்வதனைத்துமே – எந்தை
நீண்டதிருவருளால் வரும் – இன்பம்
சுத்த சுகந்தனியானந்தம் – எனச்
சூழ்ந்து கவலைகள் தள்ளியே."

வாழுகின்ற ஞானமார்க்கத்தை இச்செய்யுள் நலம்பெறக்கூறும். பராசக்தியைக் கண்டு சொல்லிய "கண்ணம்மா என் குழந்தை" என்னும் செய்யுள் அன்னைக்குக் குழந்தை மீதுள்ள ஆர்வத்தை அழகு பொருந்தக் கூறுவது. கண்ணனைக் விளையாட்டுப் பிள்ளையாகக் கண்டு பாடிய பாட்டு ஆயர்பாடியில் எருமன்றத்தில் மாயவன் தம்முன்னோடு ஆடிய பால சரிதை நாடகங்களை நினைவுறுத்துவது. கண்ணனைக் காதலனாகக் கண்டு பாடிய பாடல்கள் பலவுள் சிருங்காரம், வீபத்ஸம், பயாநகம், அற்புதம், ரௌத்ரம் என்னும் ரஸங்கள் ஒன்றும் பலவும் பொருந்தி வருகின்ற இச்செய்யுட்கள் கவிச்சுவை நுகர வல்லாருக்குத் தெவிட்டாத தெள்ளமுதமாவன.

பிரிவாற்றாமையா லெய்திய துன்பத்தை வருணித்து

"உணவு செல்லவில்லை – ஸகியே
உறக்கங் கொள்ளவில்லை
மணம் விரும்பவில்லை – ஸகியே
மலர் பிடிக்கவில்லை
குணமுறுதியில்லை – எதிலும்
குழப்பம் வந்ததடீ
கணமுமுள்ளத்திலே – சுகமே
காணக்கிடத்ததில்லை
பாலுங் கசந்ததடி – ஸகியே
படுக்கை நொந்ததடீ
கோலக்கிளிமொழியும் செவியில்
குத்தலெடுத்ததடீ
நாலுவயித்தியரும் – இனிமேல்
நம்புதற்கில்லையென்றார்
பாலத்துச் சோசியனும் – கிரகம்
படுத்து மென்று விட்டான்"

என்று கூறுகிற செய்யுட் பாகங்களும்,

''ஆற்றங்கரையதனில், முன்னமொருநாள் –எனை
அழைத்துத் தனியிடத்திற் பேசியதெல்லாம்
தூற்றிநகர்முரசு சாற்றுவனென்றே
சொல்லி வருவையடி தங்கமேதங்கம்''

''பெண்ணென்று பூமிதனிற் பிறந்துவிட்டால் – மிகப்
பிழையிருக்குதடி தங்கமேதங்கம்
பண்ணொன்று வேய்ங்குழலில் ஊதிவந்திட்டான் – அதைப்
பற்றிமறக்குதில்லை பஞ்சையுள்ளமே.''

எனவும்

''கண்ணன் முகமறந்து போனால் – இந்தக்
கண்களிருந்து பயனுண்டோ?
வண்ணப் படமுமில்லைக் கண்டாய் – இனி
வாழும்வழி யென்னடிதோழி?''

எனவும் கூறுகிற செய்யுட் பாகங்களும் மறக்கொணா நீர்மைய.

''நெரித்த திரைக்கடலில் நின்முகங் கண்டேன்
நீலவிசும்பினிடை நின்முகங் கண்டேன்
திரித்த நுரையினிடை நின்முகங் கண்டேன்
சின்னக்குமிழிகளில் நின்முகங் கண்டேன்.''

''சாத்திரக்காரனிடம் கேட்டு வந்திட்டேன் – அவர்
சாத்திரஞ் சொல்லியதை நினக்குரைப்பேன்
நேற்று முன்னாளில் வந்தஉறவன்றடி – மிக
நெடும்பண்டைக் காலமுதல் நேர்ந்துவந்ததாம்
போற்று மிராமனென முன்புதித்தனை –அங்கு
பொன்மிதிலைக் கரசன் பூமடந்தைநான்
ஊற்றமுதென்னவொரு வேய்ங்குழல் கொண்டோன் – கண்ணன்
உருவ நினக்கமையப்பார்த்த தனங்குநான்
முன்னைமிகப் பழமையிரணியனாம் – எந்தை
மூர்க்கந்தவிர்க்க வந்த நரசிங்கனீ
பின்னையோர் புத்தனென நான் வளர்ந்திட்டேன் – ஒளிப்
பெண்மையசோதரை யென்றுனை யெய்தினேன்
சொன்னவர் சாத்திரத்தில் மிகவல்லர்காண் – அவர்
சொல்லிற்பழு திருக்கக் காரணமில்லை
இன்னுங்கடை சிவரை ஒட்டிருக்குமாம் – இதில்
ஏதுக்குநாணமுற்றுக் கண்புதைப்பதே.''

என்று வருகிற செய்யுட் பாகங்களெல்லாம் தொன்றுதொட்டு வருகின்ற அத்துவித நிலையைப் புலப்படுத்துகின்றன.

கவி தன்னை அடிமைப் பறையனாகவும் கண்ணனை ஆண்டவனாகவும் வைத்துப் பாடுகின்ற செய்யுள் வியப்புச் சுவையும் கருணைச் சுவையும் ததும்புவது.

“தஞ்சமுலகினில் எங்கணுமின்றித்
தவித்துத் தடுமாறி
பஞ்சைப் பறையடிமை புகுந்தேன்
பாரமுனக்காண்டே
ஆண்டே - பாரமுனக்காண்டே”

எனக்கூறி உலகிலுற்ற துன்பம் நோய் மிடியினால் வருந்திய ஆன்மா ஆண்டவனுடைய அடிக்கமலத்தில் வீழ்ந்து அடைக்கலம் புகுவது நெஞ்சினையுருக்கும் நீர்மையதென்பதை யாவரும் மறுத்துரையார்.

(நன்றி: சுவாமி விபுலானந்தரின் ஆக்கங்கள் தொகுதி–2
மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச்சபை.)

**மன்றத்தில் நிகழ்ந்தவை**

## சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை

மேற்படி குருபூசை 2008 ஆகஸ்ட் 8 வெள்ளிக்கிழமை யாழ் கூட்டுறவு இல்ல மண்டபத்தில் மாலை 7:00 மணிக்கு கூட்டு வழிபாட்டுடன் ஆரம்பமாகியது. கூட்டு வழிபாட்டில் பூசையும், சுநதரமூர்த்திநாயனாருக்குரிய போற்றியும், அர்ச்சனைப் பாடலும் இடம்பெற்றன. இதனைத் தொடர்ந்து சைவசமயகுரவர் பாடசாலை மாணவர்களின் பேச்சுக்களும், பண்ணிசைகளும் பிரிவூதியாக இடம் பெற்றன. தொடர்ந்து இறுதிப்பூசை நடைபெற்று விபூதிப்பிரசாதமும் வழங்கி இரவு உணவு வழங்கப் பெற்றது. இக்குருபூசையினை திரு. திருமதி பாலச்சந்திரன், திரு. திருமதி ரங்கநாதன் குடும்பத்தினர் உபயமாகச் செய்து சிறப்பித்தனர்.

## பதின்மூன்றாவது திருவருட் செல்வர் விழா – 2008

கனடா சைவசித்தாந்த மன்றமும், அதனால் நடாத்தப்பட்டு வரும் சைவசமய குரவர் பாடசாலையும் இணைந்து நடாத்திய பதின்மூன்றாவது திருவருட்செல்வர் விழா – 2008 ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி வெள்ளிக்கிழமை மிசிசாகா யாழ் கூட்டுறவு

இல்ல மண்டபத்தில் பெரு விழாவாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு முதன்மை விருந்தினராக கலாபூஷணம் பண்டிதர் சி. அப்புத்துரை அவர்களும், அவர்தம் பாரியார் சைவப்புலவர் திருமதி இரத்தினம் அப்புத்துரை அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக சித்தாந்த வித்தியாநிதி எஸ். சண்முகவேல், திருமதி சண்முகவேல் அவர்களும் சிவத்திரு. இ. இராமநாதன், திருமதி விஜயலட்சுமி இராமநாதன் அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

அன்று மாலை 4:00 மணியளவில் பிரதம விருந்தினர் சைவசமயமுறைப்படி வரவேற்கப்பட்டனர். அடுத்து விநாயகர் வணக்கத்துடன் உமாபதி சிவாசாரியார் அவர்கள் இயற்றிய கொடிக்கவி எல்லோராலும் பாடப்பெற்று, நந்திக்கொடி வணக்கம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து சைவசமயகுரவர் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், மன்றத்தினர், மற்றும் அன்பர்கள் எல்லோரும் விழாவுக்கென தயாரிக்கப்பட்ட வழிபாட்டுத் தோத்திரத் திரட்டில் இருந்து திருநெறிய தமிழில் மலர் வழிபாடும் கூட்டுவழிபாடும் நடத்தினர். முதன்மை விருந்தினராக கலந்துகொண்ட சி. அப்புத்துரை, திருமதி அப்புத்துரை ஆகியோர் அவர்கள் சிறப்புப் பூசை செய்தனர். பூசையைத் தொடர்ந்து திருநீறு கொடுக்கப்பட்டு, திருநீற்றுப் பதிகம் மாணவர்களால் பண்ணுடன் பாடப்பட்டது. அடுத்து கீழ், மத்திய, மேல், உயர் பிரிவு மாணவர்கள் பன்னிரு திருமுறையை ஓதினார்கள். திருமுறைகளைப் பண்ணோடு பாடி வழிபாடு நிகழ்த்தியமை தெய்வீகம் நிறைந்த மாலைப்பொழுதாக அமைந்த நிறைவை எல்லோரிடத்தும் ஏற்படச் செய்தது.

வழிபாட்டின் பின்னர் மாலை 4:40 மணியளவில் தலைவர் உரை இடம்பெற்றது. மன்றத் தலைவர் திரு. விசுவலிங்கம் அவர்கள் மன்றத்திற்கு வருகை தந்தோர் அனைவரையும் வரவேற்று, விழா சிறப்புற நடைபெற வேண்டும் என இறையருளை வேண்டி உரை நிகழ்த்தினார். மேலும், பதின்மூன்று ஆண்டுகளாக மன்றம் செய்து வரும் அரும்பணிகள் பற்றி மிகவும் சுருக்கமாகக் கூறி அதன் பங்களிப்புகளையும் போற்றி, பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள் மற்றும் அன்பர்கள் அனைவரையும் வரவேற்று, அவர்கள் வருகைக்கு நன்றியும் தெரிவித்தார்.

திருவருட்செல்வர் விழா ஆறு அரங்குகளாகப் பிரிக்கப்பட்டு அந்ததந்த அரங்கிற்கு உரிய போற்றிப் பாடல்கள், அற்புதப் பாடல்கள் என்பவையும், மாணவர் பேச்சுக்களும், சிறப்புரைகளும் இடம்பெற்றன.

...தொடரும்

## பக்தியுடையார் காரியத்திற் பதறார்!

(பேரறிஞர் முருகவே பரமநாதன், அன்புநெறி சிறப்பாசிரியர்)

பாதாம் புயத்திற் பணிவார் தமக்குப் பலகலையும்
வேதாந்த முத்தியும் தந்தருள் பாரதி வெள்ளிதழ்ப்பூஞ்
சீதாம் புயத்தி லிருப்பா ளிருப்ப வென்சிந்தையுள்ளே
ஏதாம் புவியிற் பெறவரி தாவதெனக்கினியே.

– சரசுவதி அந்தாதி – கம்பன்



பாரதி கலைமகளைக் குறிக்கும். எனவே கலைமகள், கலைவாணி, நாமகள், சரசுவதி, வெண்கமலை, ஒரு பொருளமைவுடையன எனலாம். கவிமழை சிந்தும் பெரும் புலவர்களைப் பாரதியெனப் பேசினர் அன்று. இன்று எல்லோரும் கவிஞர்களே, சுத்தானந்த பாரதி, கவிகுஞ்சரபாரதி, கோபாலகிருஷ்ண பாரதி, நாவலர் சோமசுந்தரபாரதி, நவநீதகிருஷ்ணபாரதி என்ற வரிசையிற் சுப்பிரமணிய பாரதியும் வருகிறார். நெஞ்சில் கனல் மணக்கும் கவிதந்த கவிக்குயில் அவர். இவ்வண்ணமே அருளாளர் பலர் சரஸ்வதி என அழைக்கவும் பட்டனர். உ.ம். தயானந்த சரசுவதி, சிவானந்த சரசுவதி, சந்திரகேசர சரசுவதி. சரசுவதி கல்வித் தெய்வம். எனவே சரபோஜி மன்னன் சரசுவதி மகால் என்னும் நூல் நிலையம் அமைத்தான் தஞ்சையில். சரசுவதி பண்டாரம் என்றால் நூலகம் என்று கூறியுள்ளார் காஞ்சிப் பெரியவர். எனக்குத் தொழில் கவிதை, எனத் தன் பாட்டுத்திறத்தாலே இந்த வையத்தைப் பாலித்திட விழைந்தவர் சுப்பிரமணிய பாரதி "பலே பாண்டியா" என அவர் வாழ்த்திய கனக சுப்புரத்தினம் புரட்சிக்கவிஞர் ஆனார். பாரதியின் இராஜபாட்டை பல கவிஞர்களை உருவாக்கியது. பின்வந்த மூவர் பாரதியின் பாட்டுத் திறத்தை வாய் நிறையப் பாடியுள்ளனர்.

பாரதியார் பாட்டைக் கொஞ்சம் படிச்சுப் பாரடி
அடியே படிச்சுப்பாரடி
பாடினவாய் தேனூறும் குடிச்சுப்பாரடி
அடியே குடிச்சுப்பாரடி — கொத்தமங்கலம்சுப்பு

பாட்டுக்கொரு புலவன் பாரதியெடா – அவன்
பாட்டைப் பண்ணோ டொருவன் பாடினானெடா

கேட்டுக்கிறுகிறுத்துப் போனனேயெடா –அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாயடா
–கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை

படித்தறியா மிக ஏழைக்கிழவனேனும்
பாரதியின் பாட்டிசைக்கக்கேட்பானாகில்
எடுத்தெறிய வேணுமிந்த அடிமைவாழ்வை
இப்பொழுதே இக்கணமே...
–நாமக்கல் இராமலிங்கபிள்ளை

தமிழ் இலக்கியப் பாதையிலே ஒரு திருப்புமுனையை ஆக்கிய மகாகவி பாரதி புதுவையிலே வாழ்ந்தபோது மணக்குளத்து விநாயகர்மீது பாடிய நான்மணிமாலை திருவாசகச் சாயல் படிந்திருப்பது கற்றோர் உணர்வர். அதிலோர் அபூர்வமான பாடல் பக்தி பற்றிப் பேசுகின்றது.

பக்தியுடையார் காரியத்திற் பதறார் மிகுந்த பொறுமையுடன்
வித்து முளைக்குந் தன்மைபோல் மெல்லச் செய்து பயனடைவார்
சக்தி தொழிலே அனைத்து மெனிற் சார்ந்த நமக்குச் சஞ்சலமேன்?
வித்தைக் கிறைவா! கணநாதா! மேன்மைத் தொழிலிற் பணியெனையே!
–பாடல் எண் 27

இப்பாடலிலே எடுத்தாளப்பட்ட இரு இடங்கள் எம்மைப் பொறுமையோடு நின்று நிதானித்துக் கருமமாற்றத் தொழிற்படுத்துகின்றது. ஒன்று சிறந்த பக்திமான்கள், பக்திமதிகள். வித்து எப்படி முளையாகி ஓரிலையாகி பயிராய் – ஈரிலைப்பயிராய் மெல்ல மெல்ல வளர்கிறதோ அவ்வாறே பக்தி உடையாரும் செயற்படும் கருதுகோள் எம்மையும் படிபடியாய்ச் சிந்திக்க வைக்கிறது. அச்சமில்லை அங்கே அழுங்குதல் இல்லை. நடுங்குதல் இல்லை. நாணுதல் இல்லை. எப்படியான பக்திநெறியது! அந்த இலக்கியம் ஒரு இலக்கை நோக்கி விரைந்தோடுகிறது. அதுவே மேன்மைத் தொழில். அச் செம்பாதையில் நாமும் முனைவோம். முனையுங்களென ஒரு படிப்பினையும் தருகிறதன்றோ! கச்சியப்பர் காட்டிய மேன்மை கொள் சைவநீதி முளைவிட்ட இடம் பாரதியின் வாக்கில் விருட்சமாகி நிழல் தருகிறது நமக்கு. இனிப் பாரதியாரின் இப்பாடலை மீட்டும் மீட்டும் படித்துப் பாருங்கள்.

பாரதியின் வேதாந்தப்பாடல் வரிசையிலே பக்தியைப்பற்றி ஏழு பாடல்கள் இடம் பெற்றுள்ளன. முதற் பாட்டையும் இறுதிப்பாடலையும் கவனிப்போம்.

பக்தியினாலே – இந்தப்
பாரினி லெய்திடும் மேன்மைகள் கேளடீ!
சித்தந் தெளியும் – இங்கு
செய்கை அனைத்திலும் செம்மை பிறந்திடும்
வித்தைகள் சேரும் – நல்ல
வீரருறவு கிடைக்கும் – மனத்திடைத்
தத்துவ முண்டாம் – நெஞ்சிற்
சஞ்சலம் நீங்கி உறுதி விளங்கிடும்.
(பக்தி) பாடல்–1

சந்ததி வாழும் – வெறுஞ்
சஞ்சலம் கெட்டு வலிமைகள் சேர்ந்திடும்
இந்தப் புவிக்கே – இங்கொர்
ஈசனுண்டாயின் அறிக்கையிட் டேனுன்றன்
கந்த மலர்த்தாள் – துணை
காதல் மகவு வளர்ந்திட வேண்டும். என்
சிந்தை யறிந்தே – அருள்
செய்திட வேண்டும் என்றால் அருளெய்திடும்
(பக்தி) பாடல் 7

இந்தப் பக்தி நெறியே முத்திக்கு வழியென மணிமொழியாரும், அருணகிரியாரும் பாடியுள்ளனர். மனங்கொள்வோம்.

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே..

– – – – –

# சிவஞானபோதச் சிற்றுரை

## எளிய நடையில் எழுதப்பட்டது



ஆசிரியர்: மட்டுவில் ஆ. நடராசா
அறிமுக வெளியீடு: சைவ சித்தாந்த மன்றம், கனடா
வெளியீட்டுரை: சித்தாந்த வித்தியாநிதி எஸ்.சண்முகவேல்

திருச்சிற்றம்பலம்

சைவத்தின் மேற்சமயம் வேறிலை அதில்சார் சிவமாம்
தெய்வத்தின் மேல் தெய்வம் இல்லெனும் நான்மறைச் செம்பொருள்வாய்
மைவத்த சீர்த்திரு தேவாரமும் திருவாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர் பொற்றாள் எம் உயிர்த்துணையே.

திருவருட்செல்வர் விழாவிலே சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரைஆற்றிய பேராசிரியர் சித்தாந்த வித்தியாநிதி சண்முகவேல் அவர்கள் முதலில் மன்றப் பிள்ளைகளின் பேச்சு, பாடல்கள் முதலியவற்றைப் பாராட்டி, அதனை ஒழுங்கு முறையிலே நடத்துகின்ற தலைவரையும் அதற்கு ஒத்தாசை செய்கின்ற அன்பர்களையும் பாராட்டி "சிவஞானபோத சிற்றுரை–எளிய நடையில் எழுதப்பட்டது" என்ற ஆ. நடராசா அவர்கள் எழுதிய நூலினை அறிமுகம் செய்து வெளியீட்டுரை ஆற்றினார். சந்தான குரவர்களில் முதல்வராகிய மெய்கண்டார் எழுதிய நூலே சிவஞானபோதம். சிவஞானபோதம் என்ற நூல் நமக்கு கிடைத்த வருடம் *1234*. பதின்மூன்றாம் நூற்றாண்டிலே கிடைத்த ஒரு அருமையான நூல். அதற்கு *1775* ஆம் ஆண்டிலே தான் சிவஞானமுனிவர் எழுதிய மாபாடியம் என்ற உரை முதலில் வந்தது. அதனைத் தொடர்ந்து மற்றும் பல அறிஞர்கள் உரை எழுதியுள்ளனர்.

இன்று வெளியீடு செய்யப்படும் இந்நூலை ஆக்கியவர் மட்டுவில் ஆ. நடராசா அவர்கள். மட்டுவில் என்று சொன்ன உடனேயே இரண்டு அறிஞர்கள் ஞாபகத்திற்கு வருகிறார்கள் ஒன்று மட்டுவில் மா. க. வேற்பிள்ளை அவர்கள். மற்றையவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள். அந்த மட்டுவிலுக்குப் பெருமை சேர்க்கின்ற அளவிலே இன்று மூன்றாவது அறிஞர் ஆ. நடராசா அவர்கள் உள்ளார். இந்த மட்டுவில் நடராசன் அவர்கள் சிவஞானமுனிவர் சொன்ன அந்த கடுமையான நடையை இலகு தமிழிலே விளக்கம் கொடுக்கிறார். சைவசித்தாந்த அறிஞர்களான

பொ. முத்தையாபிள்ளை, அருணை வடிவேல் முதலியார், சி. சு. மணி போன்றவர்கள் சிவஞானபோதத்திற்கு உரை எழுதினார்கள். சைவ வரலாற்றைப் பார்த்தால் ஈழநாடும் தமிழ்நாடும் போட்டி போட்டுக்கொண்டு சைவத்தை வளர்த்திருக்கிறார்கள் என்பது புலனாகும். இந்நூலாசியரியர் ஆ. நடராசா அவர்கள் புதிய உரை ஒன்றினை எழுதாது சிவஞானமுனிவர் சொன்னதை இலகு தமிழில் தான் சொல்கிறேன் என்பதாகக் கூறுகிறார். அது இந்நூலின் சிறப்பும், புதுமையுமாகும். உதாரணமாக மூன்றாம் சூத்திரத்தைச் சொல்லி நான்காம் சூத்திரம் வரும்பொழுது சிவஞானபோத ஆசிரியர் 'இதுவும் அது,' என்று கூறியுள்ளார். அதற்கு உரை எழுதிய சிவஞானமுனிவரது மாபாடியம் 'இதுவும் அது என்று மாற்றறிந்து உரைத்தார்'' என்கிறார். அதாவது மூன்றாவது சூத்திரத்தை மாற்றிப் பார்க்க வேண்டும் என்று கூறுகிறார். இங்கே மூன்றாவது சூத்திரம் ஆன்மாவினுடைய இருப்பைச் சொல்லுகிறது (Existence of the soul). நான்காம் சூத்திரம் ஆன்மாவின் இலக்கணத்தைக் கூறுகிறது. (Characteristic of the soul). இந்நூலாசிரியர் இதனைத் தெளிவாக விளக்கி தனது நூலிலே கூறியுள்ளமை சிறப்பிற்குரியது. உண்மையில் திரு. நடராசா அவர்கள் சிவஞானமுனிவரின் உரையை எல்லோரும் விளங்கும் வகையில் எளிய மொழி நடையில் நடைமாற்றம் செய்தாரே ஒழிய மடைமாற்றம் செய்யவில்லை.

சைவசித்தாந்தம் என்பது உபநிடதங்களின் சாரம் என்பதை ஏற்றுக் கொண்டு இந்நூலாசிரியர் சித்தாந்தத்திற்கு விளக்கம் கொடுக்கிறார். அத்துவிதம், தாதாமியம் ஆகியவற்றின் விளக்கங்களும் எளிய முறையில் கூறப்பட்டுள்ளது. அத்துவிதம் என்பது இறைவனுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு. இறைவனும் உயிரும் ஒன்றல்ல வெவ்வேறானவை ஆகும். தாதாமியம் என்பது சிவனுக்கும் சக்திக்கும் உள்ள தொடர்பு. அதாவது இரண்டும் ஒன்று வெவ்வேறு முறையில் கருமம் ஆற்றுபவை என்றும் கூறப்படுகிறது. நாம் காணுகின்ற இந்த உடலை இயக்குவது உயிர் என்பது எமக்குத் தெரியும். ஆனால் அதனைக் கண்ணால் காண்பதில்லை. அவ்வாறே இந்த உயிரை இயக்குவது இறைவன். மற்றும் இந்நூலாசிரியர் மரபு முறைகளைக் கடைப்பிடித்து அவற்றிற்கேற்ப தனது நூலை ஆக்கியுள்ளார்.

சைவசமயத்திலே சைவ சித்தாந்தத்தையும் சைவத்தையும் சொன்னவர்கள் குழந்தைகள் என்றும் சமயகுரவர்களிலே மூன்று

வயதுக் குழந்தையான திருஞானசம்பந்தர், சந்தான குரவர்களிலே இரண்டு வயதுக் குழந்தையான மெய்கணடார், சண்டேஸ்வர நாயனாருக்கு ஏழு வயது, அதிகார நந்திக்கு நாலு வயது. அவ்விதமாக இரண்டு வயதுக் குழந்தையே சிவஞானபோதம் என்ற நூலை நமக்குத் தந்தவர். அதனை மிகவும் பலரும் வாசித்து அறியத்தக்க முறையில் எமக்கு எளிய உரைநடையினை தந்தவர் மட்டுவில் ஆ. நடராசா அவர்கள். இந்த அருமையான நூலை எல்லோரும் பெற்று ஆதரவளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு தனது உரையை நிறைவு செய்தார்.

(திருவருட் செல்வர் விழாவில் ''சிவஞானபோச் சிற்றுரை'' என்ற நூலுக்கு பேராசிரியர் சித்தாந்த வித்தியாநிதி திரு எஸ். சண்முகவேல் அவர்கள் ஆற்றிய வெளியீட்டுரையின் சுருக்கம். தொகுப்பு: செல்வி ஜனுயா சிவானந்தன் (தரம்–11), சைவசமயகுரவர் பாடசாலை)

–––––

## நால்வர் வரலாறு -(ஆய்வுச் சிந்தனைகள்)

ஆசிரியர்: முனைவர் திருமதி கோமதி சூரியமூர்த்தி
வெளியீடு: சைவ சித்தாந்த மன்றம், கனடா.– 2008
வெளியீட்டுரை: கலாநிதி நா.சுப்பிரமணியன்



(கனடா சைவசித்தாந்த மன்றத்தினர் 15–08–2008அன்று மிசிசாகா யாழ்.கூட்டுறவு இல்ல மண்டபத்தில் நடத்திய பதின்மூன்றாவது திருவருட்செல்வர் விழாவில் ஆற்றிய உரையின் கட்டுரைவடிவம்.)

**சைவ** வரலாற்றிலே நால்வர் எனப்படும் நாவுக்கரசர், சம்பந்தர், சுந்தரர் மற்றும் மணிவாசகர் ஆகியோருக்குரிய முக்கியத்துவம் ஏற்கெனவே பலமுறை எழுதப்பட்டும் பேசப்பட்டும் வந்த ஒன்றாகும். நாம் இன்று இல்லற வாழ்வில் நின்றுகொண்டே சைவத்தை அனுசரிப்பதற்கும் ஆலயத்தை மையப்படுத்திய பண்பாட்டு உணர்வுடனான வாழ்வியலை மேற்கொண்டு வருவதற்கும் அடித்தளம் இட்டவர்கள் இந்நால்வர் என்பது வரலாற்றில் நிறுவப்பட்ட செய்தியாகும். இவர்களும் இவர்களுக்குச் சமகாலத்திலும் சற்று முன்னாகவும் வாழ்ந்த ஏனைய நாயன்மார்களும் வாழ்ந்துகாட்டிய

முறைமைகள் தொடர்பாக மரபாக வழங்கிவரும் செய்திகளையே சைவ வாழ்வியலுக்கான முன்மாதிரி முறைமைகளாகக் கொள்கிறது, சைவ உலகம்.

இந் நாயன்மாரின் வாழ்க்கை அநுபவங்களை நயந்து பேசுவது, அவற்றில் புலப்பட்டு நிற்கும் திருவருள்சார் அம்சங்களில்(அற்புதங்களில்) உளம் தோய்ந்து உருகுவது, இவர்களின் ஆக்கங்களான திருமுறைகளை ஓதி வழிபாடியற்றுவது மற்றும் இவர்களைக் குருமுதல்வர்களாகக் கொண்டு பூசிப்பது என்பன வழிவழியாகப் பின்பற்றப்பட்டு வரும் சைவப்பண்பாட்டு மரபின் முக்கிய கூறுகளாகிவிட்டன.

இவ்வாறு நமது சைவ மரபின் வழிகாட்டிகளாகவும் வழிபாட்டுக் குரியவர்களாகவும் பேணப்பட்டுவரும் நாயன்மார்களில் முதல்வரிசையினராகத் திகழும் நால்வரின் வரலாற்றை ஆய்வுப் பார்வையுடன் எடுத்துப்பேச முற்பட்டுள்ள நூல்களின் வரிசையில் ஒன்றாக இன்று எமது பார்வைக்கு வந்துள்ள ஆக்கம், முனைவர் திருமதி கோமதி சூரியமூர்த்தி அவர்களின் **நால்வர் வரலாறு (ஆய்வுச் சிந்தனைகள்)**என்ற தலைப்பிலான இந்நூல்.

மேற்படி நால்வரில் முதல்மூவரின் வரலாற்றுக்கு முக்கிய ஆதாரமாகக் கொள்ளப்படும் ஆக்கம் **பெரியபுராணம்** ஆகும். நான்காமவரான மணிவாசகரின் வரலாற்றுக்கு ஆதாரங்களாகக் கொள்ளப்படுவன பெரும்பற்றப் புலியூர் நம்பியின் **திருவிளையாடற் புராணம்,** பரஞ்சோதி முனிவரின் **திருவிளையாடற் புராணம்** கடவுள்மாமுனிவரின் **திருவாதவூரடிகள்புராணம்** மற்றும் **திருப்பெருந்துறைப் புராணம்** முதலியனவாகும்.

'புராணம்' என்ற வகைமைசார்ந்த இவ்வாக்கங்கள் மேற்படி நால்வரின் ஆக்கங்களான முதல் எட்டுத் திருமுறைகள் மற்றும் தமது காலப்பகுதியில் வழக்கிலிருந்த நால்வர் பற்றிய செவிவழிச் செய்திகள் என்பவற்றை சான்றாதாரங்களாகக் கொண்டு அவர்களின் வாழ்வியல் தொடர்பான அம்சங்களைக் கதைவடிவில் தொகுத்துத் தந்துள்ளன. இவர்களின் தோற்றம் (அவதாரம்), இவர்கள் இறையருள் எய்திய பாங்கு, பக்தியநுபவத்தை வெளிப்படுத்திய முறைமை, இவர்களின் சமூகநிலைப்பட்ட சாதனைகள் மற்றும் நிறைவு (இறைபதமடைந்த) நிலை முதலானவற்றை விரித்துரைக்கும் பாங்கில் மேற்படி புராணங்களின் கதையம்சங்கள் அமைந்துள்ளன.

இவ்வாறான புராணநிலைப்பட்ட கதையம்சங்களையே உண்மை நிகழ்வுகளாகக் கொண்டு நால்வரின் வரலாற்றைப் பேசும்முறைமை சைவமரபில் நிலவி வருகின்றது. இம் மரபைச் சார்ந்து நின்று எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பாக அமையும் நூலாக்கம் இது. கனடா சைவ சித்தாந்த மன்றத்தின் வெளியீடாக உங்கள் மத்தியில் இந்நூல் வருகிறது.

புராண மரபையொட்டி மேற்படி நால்வரின் வரலாறுகளைப் பேசமுற்பட்டுள்ள நூலாசிரியர் முனைவர் திருமதி கோமதி சூரியமூர்த்தி அவர்கள் தேவார – திருவாசகத் திருப்பாடல்கள், சைவசித்தாந்தம் சார்பான சிந்தனைகள் மற்றும் கிருபானந்தவாரியார் முதலிய சமயப் பெரியார்களின் கருத்துகள் முதலியவற்றைப் பொருத்தமான இடங்களில் எடுத்தாண்டு நூலுக்குச் சுவை சேர்த்துள்ளார்.

நால்வரின் வரலாறுகளையும் கூறும் முறைமையில், அவ்வவரின் வாழ்க்கையில் நடைபெற்றனவாகப் புராணங்கள் தரும் செய்திகள் வரிசைப்படி எடுத்துரைக்கப் பட்டுள்ளன. அவர்கள் மீது இறைவனின் திருவருள் படிந்த – அதாவது அவர்கள் இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட – சூழ்நிலைகள், அவர்களுக்காக இறைவன் நிகழ்த்தியதாகக் கூறப்படும் அற்புதங்கள், அவர்களால் நிகழ்த்தப்பட்டனவாகக் கூறப்படும் அற்புதச் செயல்கள் மற்றும் அவர்களது சமூகம்சார் இயங்குநிலைகள் ஆகிய பலநிலைச் செய்திகளையும் சைவ நம்பிக்கை என்ற தளத்தில் நின்று நூலாசிரியர் எடுத்துரைத்துள்ளார்.

மேலும் குறித்த சில தேவாரப் பதிகங்களை நம்பிக்கையுடன் ஓதிவந்தால் அவை இம்மையிலேயே பயன்தருவன என்பதையும் சுட்டியுணர்த்தியுள்ளார். குறிப்பாக “சம்பந்தரின் ‘கூற்றிருக்கை’ என்ற ஒரு பதிகத்தைப் பாடினால் அவருடைய அனைத்துப் பதிகங்களையும் ஓதியதற்கு ஒப்பாகும் என்பர்”, என அவர் தந்துள்ள தகவல்(ப.34) முக்கியமானது.

இந்நூலின் சிறப்பு மற்றும் பயன்பாட்டுநிலை என்பன தொடர்பாக பதிப்பாசிரியர் திரு. தி. விசுவலிங்கம் அவர்கள் தந்துள்ள கணிப்பொன்றை இங்கு சுட்டுவது பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

"...சைவ சமய குரவர்கள் பாடியருளிய திருவருட்பாக்களின் பயன்களையும், அவற்றினைத் திரிகரண சுத்தியுடனும், உண்மையான பக்தியுடனும், முழுநம்பிக்கையுடனும் பாடிப்பயன் பெற்றவர்களின் செய்திகளையும், எழுத்தாசிரியர் தாமும் அதனால் அடைந்த அநுபவங்களையும் பயன்களையும் கூறிவிளக்குவது மெய்சிலிர்க்க வைக்கிறது." (ப. 3)

நூலின் கட்டமைப்பு என்றவகையில் குறிப்பிடத்தக்க சிறப்பம்சங்களில் ஒன்று, கதைக் கூறுகள் துணைத் தலைப்புகளில் வகைப்படுத்தப்பட்டுள்ள முறைமையாகும். இன்னொன்று, மிக இலகுவான நடையில் அமைந்த எடுத்துரைப்பு முறைமையாகும். இந்த அம்சங்கள் இளம் தலைமுறையினர் – குறிப்பாக கனடா போன்ற புலம்பெயர் சூழல்களின் சைவச்சிறார்கள் – நாயன்மார் வரலாற்றைக் கற்றுச் சுவைக்கத் துணைபுரிவனவாகும். அவ்வகையில் இளந்தலைமுறையின் பயன்பாட்டுக்குரிய முக்கியமானதொரு நூலாக்கமாக இது அமைந்துளது.

சமயகுரவர் நால்வரின் வரலாறு கூறும் நூல்களின் வரலாற்றில் இந்நூலுக்குரிய முக்கியத்துவம் மற்றும் இது புலப்படுத்தி நிற்கும் ஆய்வுப்பார்வையின் இயல்பு என்பன தொடர்பான சில குறிப்புகளை வெளியீட்டுரை என்ற வகையில் இங்கு முன்வைப்பது பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

ஈழத்திலே நாயன்மார் வரலாற்றை வசனவடிவில் எடுத்துப்பேசும் முயற்சியானது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் (1822–79) எழுத்துகளிலேயே தொடங்கிவிட்டது. அவர் **பெரியபுராணத்**தை வசனவடிவில் தந்தவர் என்பதைச் சைவஉலகம் அறியும். அவரை அடியொற்றிப் பலரால் பலமுறை நாயன்மார் வரலாறுகள் எழுதப்பட்டுள்ளன. ஈழத்தில் சைவசமயம் ஒரு பாடநெறியாக ஆரம்பவகுப்பு முதல் 11ஆம் தரம் வரை நிகழ்ந்து வருவதால் அவ்வகுப்புகளுக்கு அமைந்த பாடப்பரப்பில் நாயன்மார் வரலாறுகள் பல மட்டங்களில் கற்பிக்கப்பட்டு வந்துள்ளன, கற்பிக்கப்பட்டு வருகின்றன. இத் தேவைகருதி நாயன்மார் கதைகள் பாடநூற்பரப்பில் வசனவடிவில் பலமுறை பதிவாகி வந்துள்ளன.

தமிழகச்சூழலின் நிலைமை வேறாகும். சைவசமயம் பாடசாலை மாணவர்களுக்கான முறைசார் கல்விக்குரிய ஒரு பாடநெறியாக அங்கு பயிலவில்லை. 'சமய நம்பிக்கை என்பது

பகுத்தறிவு சார்ந்தது அன்று' என்ற திராவிட இயக்கச் சார்பான நிலைப்பாடும் சமயச் சார்பின்மை(Secularism) என்ற இந்திய அரசியல் நிலைப்பாடுமே இதன் முக்கிய காரணிகளாகும். இந்நிலையில் அங்கு சமயச்சார்பான இக்கதைகள் ஆதீனங்கள் மற்றும் மடங்கள் நடத்தும் சிறப்புநிலைச் சமயக் கல்வி முயற்சிகளின் ஊடாகவே மக்களிடம் செல்கின்றன. இப் பின்புலத்தைக் கருத்துட்கொண்டே முனைவர் திருமதி கோமதி சூரியமூர்த்தி அவர்களின் இம் முயற்சியின் முக்கியத்துவத்தை நாம் நோக்கவேண்டும்.

இந்நூலின் தலைப்பானது இது ஒரு ஆய்வுநோக்குடைய முயற்சி என்பதை உணர்த்தும். ஆய்வு இருவகையில் நிகழ்வது. ஒன்று, நம்புகின்ற ஒன்றை விளக்கியுரைக்கும் நோக்கில் அமைவதாகும். இன்னொன்று, புறநிலையாக (Objective ஆக) நின்று அந்த நம்பிக்கை மீதே ஐய வினா எழுப்பும் முறைமையில் மேற்கொள்ளப்படுவதாகும். இந்நூல் முதல்வகை சார்ந்தது. நாயன்மார் பற்றிய புராண மரபுச் செய்திகளை உண்மையான வரலாற்று நிகழ்வுகளாகவே கொண்டு விளக்கிப் பேச முற்பட்டுள்ளமை இதனை உணர்த்தும். சைவச் சிறார்கள் தமது சமய மரபை நம்பிக்கையுடனும் பற்றுறுதியுடனும் பேணிக் கொள்வதற்கான செயன்முறையாக இது அமைந்துளது. அவ்வகையில் சைவ உலகால் வரவேற்கப்படவேண்டிய நூலாக்கம் இது.

புறநிலையாக நின்று, "மேற்படி புராணமரபுசார் செய்திகள் உண்மை நிகழ்வுகள் தாமா?" என்ற வகையில் எழுப்பப்படக்கூடிய ஐயவினாக்களுக்கு இந்தவகை ஆய்வில் (நம்பிக்கை சாரந்த விளக்கச் செயற்பாட்டில்) இடமில்லை என்பது வெளிப்படை. மேற்படி சைவமரபைப் பற்றுறுதியுடன் பேணிநிற்கும் சிறார்கள் மற்றும் இளையதலை முறையினர் அறிவுநிலையில், மேற்சுட்டியவாறான ஐய வினாக்களை எழுப்பக்கூடிய மனப்பக்குவத்தை அடையும்போது முனைவர் திருமதி கோமதி சூரியமூர்த்தி அவர்களின் இந்த நூலைத் தாண்டியும் அவர்களுடைய பார்வைகள் விரிவடையும் என்பதைச் சுட்டுவதோடு எனது இந்த வெளியீட்டுரையை நிறைவு செய்கிறேன்.

-----

சென்ற இதழின் தொடர்ச்சி........

# சைவசித்தாந்தம்

(செந்தமிழ் வேந்தர், சித்தாந்த வித்தகர். திரு. ந. ரா. முருகவேள், M.A., M.O.L.)

## உலகியலொடு தழுவியது

சைவ சித்தாந்தப் பெருஞ் சான்றோராகிய அருள்நந்திசிவம், சமய தத்துவக் கொள்கைகள் மக்களின் நடைமுறை வாழ்வில் பிரிவற ஒன்றிச் செயற்படுத்தப் பெறுதல் வேண்டும் என்னும் கோட்பாடு உடையவர். சமயம்வேறு, வாழ்க்கைவேறு என்று இல்லாமல், ‘‘சமயமே வாழ்க்கை, வாழ்க்கையே சமயம்’’ என்னும் நிலையில் அமைதல் வேண்டும் என்பது, அவர்தம் அருள் உள்ளம்! ஆதலின் சமய வாழ்வில் தலைப்பட விரும்பும் தக்கோர் அனைவரும், பின்வரும் பதினாறு இயல்புகளை இயல்பாக உடையவராதல் வேண்டும் என்று குறிப்பிட்டு அருளுகின்றார்.

1. உயர்ந்தவரோடு பொருந்த நடத்தல்.
2. யாரிடத்தும் அன்பாகப் பழகுதல்.
3. எளியாரிடத்தும், சிற்றுயிர்கள் மாட்டும் இரக்கம் கொள்ளுதல்.
4. உலக இயற்கை அறிந்து அதற்கு ஏற்ப நடந்து கொள்ளும் திறம்.
5. யாவர் இடத்தும் இன்முகம் காட்டி, இன்சொற் கூறி நலம் புரியும் தன்மை.
6. எல்லோரையும் அன்பினால் இனிய தொடர்புடையவர்களாகச் செய்து கொள்ளும் உயரிய பண்பு.
7. நல்ல பண்புகள் பலவும் அமைந்து விளங்குதல்.
8. ஐம்பொறியடக்கல், நல்லன கடைப்பிடித்தொழுகுதல்.
9. தக்கோர்க்குத் தக்கபடி இயன்றன கொடுத்து உதவி புரியும் இயல்பு.
10. அறிவும் அகவையும் அநுபவமும் முதலியவற்றால் மூத்தவர் களிடம் பணிவு தோன்ற ஒழுகுதல்.
11. எவர்மாட்டும் செருக்கின்றி நயமாகக் கலந்து பழகி இனிது அளவளாவுதல்.
12. பிறர்மனை விழையாமை, பிறன்பொருள் வெஃகாமை முதலிய நற்பண்புகளைப் பெற்றுத் திகழும் பற்றற்ற தூய உணர்வு.
13. உண்மை கடைப்பிடித்து வாழ்தல்.
14. மறந்தும் தீநெறிப்படராது அறநெறியே போற்றி, அடங்கி வாழ்தல்.
15. தக்கதுஇது தகாததுஇது என்று, பகுத்தறிந்து வாழ வல்ல திறமுடைமை.
16. சான்றோர்களையும், சான்றோர்களின் கொள்கைகளையும் போற்றித் தழுவி, மன்னுயிர்நலங் கருதிப் பணியாற்றுதல்.

இவைகளும், இவைகளைப் போன்ற பிற பண்பொழுக்க நலங்களும் எல்லாம், நம் தமிழ் நாகரிகப் பண்பாடுகளேயாம் என்பது, சொல்லாமலே பெறப்படும். இத்தகைய தமிழ் நாகரிகப் பண்பாடுகளின் பயனும் சாரமுமே, சைவ சித்தாந்தத் தத்துவக் கொள்கையாக உருப்பெற்று வடிவெடுத்து அமைந்தன எனலாம். பின்வரும் பாடலில் இவைகள் சுட்டப் பெற்றிருத்தல் அறிந்து மகிழ்த்தக்கது.

''ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம் உபசாரம் உறவு சீலம்
வழுக்கிலாத் தவம் தானங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவு அடக்கம் அறிவொடு அர்ச்சித்தல் ஆதி
இழுக்கிலா அறங்கள் ஆனால் இரங்குவான் பணி அறங்கள்''
*–சித்தியார் 2:23*

**பரந்த நோக்கம்**

சமயங்கள் முற்போக்குணர்வுக்குத் தடைசெய்வன என்றும், சீர்திருத்தச் செயல்களை எதிர்ப்பன என்றும், மக்கள் வாழ்வியலைப் பலவகைக் கட்டுப்பாடுகளால் முடக்கி விடுவன என்றும், ஒரு சிலர் குறை கூறுவதுண்டு. சைவ சித்தாந்தம் அத்தகைய குறைபாடுகளை உடையதன்று.

''தொன்மையவாம் எனும் எவையும்
நன்றாகா, இன்று
தோன்றுவன எனும் எவையும் தீதாகா''

என உமாபதிசிவம், தமது சிவப்பிரகாசம் எனும் நூலில் முழங்கியிருத்தல், சைவ சித்தாந்த சமயம் முற்போக்குணர்வுக்குத் தடைசெய்வதோ, சீர்திருத்தச் செயல்களை எதிர்ப்பதோ அன்று என்பதனைத் தெளிவுறுத்தும்.

''எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருள்''

எனச் சேக்கிழார் பெருமான், பெரியபுராணத்தில் அருளிச் செய்திருத்தல் ஒன்றே, சைவ சித்தாந்தம் எத்தகைய விரிவான சிறந்த நல்ல பெருநோக்குடைய சமயம் என்பதற்குச் சான்று பகரும்.

''சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்!
கோத்திரமும் குலமும் கொண்டென் செய்வீர்?
பாத்திரம் சிவம் என்று பணிதிரேல்
மாத்தி ரைக்குள் அருளும் மாற்பேறரே''

''யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே''

என்பன போல வரும் அருளுரைகள், சைவ சித்தாந்தம் எத்தகைய இனிய எளிய நன்னெறி என்பதனை நன்கினிது புலப்படுத்தும். ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்''. ''எவ்வுயிரும் நீங்காது உறையும் இறைசிவம் என்று எவ்வுயிர்க்கும் அன்பாய் இரு'' ''அன்பே சிவம்'' என்பன போலவரும் திருமொழிகள் பலவும் இங்கு நாம் சிந்தித்து மகிழத்தக்கன.

**எல்லோருக்கும் ஏற்றது**

"சைவ சித்தாந்தம் எல்லாச் சமயங்களையும் ஏற்றபெற்றி இசைந்து ஏற்பது: எதனையும் இகழ்ந்து ஒதுக்காமல், இனிது அணைத்துத் தன்னுட் பொதிந்து கொள்வது. உலகம் முழுவதற்கும் ஏற்புடைய மனித குலச் சமயமாகத் திகழ்வது. வேறு பிற எந்தச் சமயத்தின் வளர்ச்சியையும், அஃது எதிர்க்கக் கருதுவதில்லை. ஏன் எனில், பிற எல்லாச் சமயங்களையும் தன்னோடு அணைத்துத் தழுவிப் போற்றிக் கொள்வதில் அதற்கு இடர்ப்பாடு ஏதுமில்லை. ஒவ்வொருவருடைய உள்ளத்திற்கும் நிறைவு அளிக்கத் தக்கவகையில் அது சால்புமிக்க விளங்குகின்றது. பல்வேறு மனித இயல்பிற்கும் ஒழுக்கத்திற்கும் ஏற்புடையதாகச் சைவ சித்தாந்தம் தன்னை ஆக்கிக் கொள்ளவல்லதாக உள்ளது. நுண்பொருள் தத்துவ அறிஞர்களுக்குரிய ஆன்மீக அருவக் கூறும், கவிதையுணர்வும் கற்பனைத் திறனும் மிக்கவர்களுக்குரிய நடைமுறைப் பருவடிவக் கூறும், அமைதியை நாடும் தனிமை விரும்பிகளுக்குரிய சாந்திநலம் மிக்க சிந்தனைக் கூறும், ஒரு சேர வாய்ந்ததாகத் தலைசிறந்து விளங்குகிறது.'' எனப் பொதுவகையில் இந்துமதம் பற்றிச் சர். மானியர் வில்லியம்ஸ் என்னும் பேரறிஞர் கூறுவது, நம்முடைய சைவசித்தாந்தத்திற்கும் சாலப் பொருந்தும் எனலாம்.

**முடிவுரை**

இத்தகைய பல பெருஞ் சிறப்புகளை உடைய நம்முடைய சைவ சித்தாந்தத் தத்துவக் கொள்கையானது, ஆயுந்தோறும் அறிஞர்களுக்கு ஆராப் பெருவிருந்தாக அமைந்து விளங்குகிறது.

''ஆர் அறிவார் இந்த அகலமும் நீளமும்'' எனத் திருமூலர் பாடுவது போல, அமிழ்தினும் இனிய நமது அருமைத் தமிழ்மொழியின் அகலமும் நீளமும் ஆழமும் ஆய்ந்து இன்புற விழைவோர் அனைவரும், சைவத் திருமுறைகளையும் சைவ சித்தாந்த சாத்திரங்களையும் புறக்கணித்து ஒதுக்காமல் விரும்பிக் கற்று மகிழும் கடப்பாடு உடையவராவர். இம்மை வாழ்வில் இதனின் மிக்க இன்பப் பேறு பிறிது ஒன்றில்லை எனத் துணிந்து கூறலாம். ஜான் மில்ட்டன் என்னும் ஆங்கிலப் பெருங் கவிஞர் பாடுவது போல,

''எத்தகை இன்ப ஊற்றாய்
இறையருள் நூல்கள் உள்ள!
அத்தகை யவற்றை அந்தோ,
அறிவிலார் கடினம் என்பர்!
வித்தகக் கண்ணன் ஊதும்
வேய்ங்குழல் இசைபோல் இன்பம்
மிக்கொளிர்ந்து, அறிஞர்க்கு ஆரா
விருந்தென மிளிரும் நன்றே''

– ந. ரா. முருகவேள்

என்று நாமும் நமது சைவ சித்தாந்தம் பற்றிப் பாடி மகிழலாம். கிரேக்க நாட்டுத் தத்துவ ஞானியாகிய தேல்சு என்பார், தாம் ஒரு விலங்காக அல்லாமல் மனிதனாகவும், பெண்ணாக அல்லாமல் ஆணாகவும், கானகனாக அல்லாமல் கிரேக்கனாகவும் பிறந்ததற்குப் பெருமிதம் கொண்டு மகிழ்கின்றார். அது போல நாமும் ''நரர்பயில் தேயம் தன்னில் நான்மறை பயிலா நாட்டில் விரவுதல் ஒழிந்து'' தமிழராகவும் சைவராகவும், சைவ சித்தாந்தச் செந்நெறியாளராகவும் பிறக்கப் பெற்றமை குறித்துப் பெருமிதம் கொண்டு மகிழலாம்.

''மனிதனாய், ஆணாய்க், கிரேக்கனாய் பிறந்த
மாட்சிமைக்கு அறிஞர்தாம் ஒருவர்
நனிமிக மகிழ்ந்தார் நலம்மிகு தமிழன்,
நற்சைவன், சைவசித்தாந்தி,
எனஇவண் பிறந்த இனியநற் பேற்றை
எண்ணி, நாம் இறையருள் வழுத்தித்
துணியறு சைவச் செந்தமிழ் வளர்க்கும்
தொண்டுகள் புரிந்துநன் றுய்வாம்''.

– ந. ரா. முருகவேள்

முற்றும்

# திருமுறைகளில் சிவஞானம் பற்றிய சிந்தனைகள்



(சித்தாந்த கலாநிதி, சைவநன்மணி, சித்தாந்த சாகரம், சித்தாந்தச் செம்மணி, முனைவர் திருமதி கோமதி சூரியமூர்த்தி, அன்புநெறி சிறப்பாசிரியர்)

## உயிர்கட்கு ஞானம் அருளுபவன்

ஞானசம்பந்தர்,

''ஞானத்திரளாய் நின்ற பெருமான் நல்ல அடியார் மேல்
ஊனத்திருளை நீக்கும் அதுவும் உண்மைப் பொருள் போலும்''
(1:69:3)

என்று திருவண்ணமலைப் பதிகத்தில் கூறுகின்றார்.

உயிர்கள் இறைவனை உணராவண்ணம் மறைப்பது ஆணவம். இந்த மறைத்தல் சக்தி காரணமாக ஆணவம் இருள் என்று சொல்லப்படும். அஃது உயிர்களிடத்திலுள்ள குற்றம் ஆதலால் ஊனம் என்ற அடைமொழி கொடுத்து ''ஊனத்திருள்'' என்கின்றார் சம்பந்தர். முற்கூறிய பாடல் தொடரில் ''நீக்குதல்'' என்றது அதனது சக்தியை அடக்குதல் எனப் பொருள். சூரிய ஒளி முன் விளக்கொளி விளங்காது அடங்கித் தோன்றுவது போல, சிவப்பேரொளி முன் அகஇருள் அடங்கி நிற்கும்.

## முன்செய் தவத்தால் ஞானம் உண்டாதல்

இங்குத் தவம் என்ற சொல் சிவவழிபாட்டினைக் குறிக்கும். ''சிவத்தைப் பேணின் தவத்திற்கு அழகு'' (கொன்றை வேந்தன்) என்பது ஔவை வாக்கு. பேணுதல் என்ற சொல் வழிபடுதல் எனப் பொருள்படும்.

''இங்கு வரும் இவள் நம்மைப் பேணும் அம்மை காண்''
(காரைக்காலம்மையார் புராணம், செ.58)

என்று இறைவன் காரைக்காலம்மையை பற்றி உமாதேவியிடம் கூறியது இங்கு நினைவு கூரத்தக்கது. சிவ வழிபாடுகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகும். இவற்றுள் முதல் மூன்றும் ''**இறப்பில் தவம்**'' (சிவஞானபோதம், உதாரண வெண்பா, 46) எனப்படும். அவை இடைநிலைப்பயன்களாகிய சாலோக, சாமீப, சாரூபத்தைத் தருவதோடு அழிந்து விடாது, தொடர்ந்து வந்து ஞானம் பெறச் செய்து முடிநிலைப்பயனாகிய சாயுச்சியம் எனப்படும் பரமுத்தியைத் தருதலால் இறப்பில் தவம் எனப்படும். **உயிர்கள்**

**பல பிறவிகளில் செய்த தவத்தின் முதிர்ச்சியாலேயே உயிர்களிடத்துச் சிவஞானம் சித்திக்கும்.** இதற்குக் கண்ணப்ப நாயனார் வரலாறு எடுத்துக்காட்டாகும்.

முன்புசெய் தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பமான
அன்பினை எடுத்துக் காட்ட அளவிலா ஆர்வம் பொங்கி
மன்பெருங் காதல் கூர வள்ளலார் மலையை நோக்கி
என்பு நெக்குருகி உள்ளத்து எழுபெரு வேட்கையோடும்
(கண்ணப்ப நாயனார் புராணம், செ. *102*)

என்ற பாடலில் சேக்கிழார், கல்வியறிவில்லாத வேடர் குலத்தில் பிறந்த திண்ணன் (கண்ணப்பர்) காளத்திநாதர்மேல் கொண்ட முடிவிலா இன்பமான அன்பிற்கு, அவர் முற்பிறவியில் செய்த தவத்தையே காரணமாகக் காட்டுகின்றார். கண்ணப்பர் முற்பிறவியில் அர்ச்சுனனாய் தவம் செய்தவர் என சீகாளத்திப் புராணம் கூறும். **"தவத்தின் ஈட்டம்"** என்றது பல பிறவிகளில் செய்த தவத்தின் தொகுதியைக் குறிக்கும்.

சிவவழிபாடுகள் எதுவும் செய்யாத சம்பந்தர், மூவாண்டில் ஞானம் பெற்றது எப்படி எனச் சிலர் வினவுவர். ஞானசம்பந்தர் முற்பிறவிகளில் சரியை, கிரியை, யோக வழிபாடுகள் செய்த சாமுசித்தர் என்பதை,

''பண்டு திருவடி மறவாப் பான்மையோர் தமைப் பரமர்
மண்டு தவ மறைக்குலத்தோர் வழிபாட்டின் அளித்தருள''
(திருஞானசம்பந்தர் புராணம், செ. 55)

என்ற சேக்கிழார் வாக்கு உணர்த்தும். நாவுக்கரசரும் முற்பிறவியில் கயிலையில் தவம் செய்த வாகீச முனிவர் ஆவார்.

''வளர் திருத்தொண்டின் நெறிவாழ, வரு ஞானத் தவமுனிவர் வாகீசர்''
(திருநாவுக்கரசுநாயனார் புராணம், செ. *1*)

என்று சேக்கிழார் நாவுக்கரசர் முற்பிறவியில் செய்த தவத்தைக் குறிப்பிடுகின்றார். மாணிக்கவாசகரும் முற்பிறவியில் தவம் செய்த முனிவர் என உத்தரகோசமங்கைப் புராணம் கூறும்.

...தொடரும்

**சிறுவர் பகுதி**



## சுப்பிரமணிய பாரதியார்

(செல்வி றக்ஷனா திருமுருகா, தரம் 7, சைவசமயகுரவர் பாடசாலை)

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தமிழ் நாட்டிலுள்ள எட்டயபுரத்தில் 1882ம் ஆண்டு சின்னச்சாமி ஜயருக்கும் இலட்சுமி அம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார். பாரதி தமிழர்களின் உள்ளத்திலும் வாழ்க்கையிலும் உன்னதமான புரட்சியை உண்டாக்கினார். இவரின் கவிதைகள் தாகூரின் கீதாஞ்சலியைக் காட்டிலும் உயர்ந்தது. இவரை "உலக மகாகவி" என்று தமிழறிஞர் திரு. வி. கல்யாணசுந்தரனார் கூறினார். இவரின் கவிதையின் பெருமையை பாரதி நூற்றாண்டின்போது உலகெங்கும் பல தேசத்து மக்களும் கொண்டாடினார்கள்.

இவர் கவிஞர் மட்டுமல்லாது எதிர் காலத்தையும் கணித்துக் கூறும் தீர்க்கதரிசியாகவும் இருந்தார். இவருடைய பாடல்களும் கட்டுரைகளும் எக்காலத்தைச் சேர்ந்த மக்களுக்கும் பொருந்தக் கூடிய வாழ்வுநெறியை எடுத்துச் சொல்கின்றன. இவர் மிகச்சிறந்த தேசபக்கதர். தம் எழுத்துத்திறனைப் பயன்படுத்தி வையம் வாழ்வதற்கும் நாடு விடுதலை பெறவும் பாடுபட்டார்.

இவர் கடினமான நடையில் இருந்த இலக்கண இலக்கியங்களை எளிய நடையில் எழுதி எல்லோரும் படித்து பயன்பெறுமாறு செய்தார். தமிழில் மறுமலர்ச்சியைக் கொண்டுவந்து புதியதொரு பாதையை வருங்கால கவிஞர்களுக்கு காட்டினார். தேசியப் பாடல்கள், சமூகசீர்திருத்தப் பாடல்கள், கடவுளுக்குரிய பாடல்கள், குழந்தைகளுக்கான பாடல்கள் எனப்பல பாடல்களையும் பல கட்டுரைகளையும் எழுதினார். இவரது கதைகள் பாடல்கள் நெஞ்சை அள்ளக்கூடியவை. ஆழ்ந்த இலக்கிய அழகு கொண்டவை. எளிமையானவை, தெளிவானவை, ஒளி மிகுந்தவை, பரிசுத்தமானவை, காவியரசம் பொருந்தியவை, காலத்தை மீறி நிற்க வல்லவை. இவரது வாழ்க்கை இன்னல்கள், போராட்டங்கள் நிறைந்ததாக இருந்தும் அற்புதமான எழுத்தோவியங்களை தந்தார்.

பாரதியார் தமது 39 வது வயதில் 1921ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ம் திகதி இறையடி சேர்ந்தார். பாரதியை போன்ற மேதைக் கவிஞர்கள் இவ்வுலகில் பலநூற்றாண்டுக்கு ஒருமுறை தான் அவதரிக்கின்றனர். அவரின் அற்புதமான படைப்புக்களை நாமும் படித்து எமது வாழ்வை நெறிப்படுத்திக் கொள்வோம். அவரின் பெருமைகளை போற்றி மதித்து நினைவு கூருவோம்.

சென்ற இதழின் தொடர்ச்சி........

# இரண்டாம் அதிகாரம்-உயிரின் நிலைமை

(சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம், பி.ஏ. அவரகள்)

எண்ணிதாய் நித்தமா யிருண்மலத்தி லழுந்தி
யிருவினையின் றன்மைகளுக் கீடான யாக்கை
யண்ணலரு ளானண்ணி யவையவரை யதனால்
அலகினிகழ் போகங்க ளருந்து மாற்றாற்
புண்ணியபா வம்புரிந்து போக்குவர வுடைத்தாய்ப்
புணருமிருள் மலபாகம் பொருந்தியக்கா லருளால்
உண்ணிலவும் ஒளியதனா லிருளகற்றிப் பாத
முற்றிடுநற் பசுவர்க்க மெனவுரைப்ப ருணர்ந்தோர்.

– சிவப்பிரகாசம்: 2ம் சூத்திரம். செய். 1

## 1. ஆன்மா, கடவுள், பாசம்

"உன்னுடைய உடம்பு பருத்துவிட்டது" என்று உன்னைப் பார்த்து நான் சொல்லுகிறேன். உன்னுடைய உடம்பு என்றதனாலே நீ வேறு, உடம்பு வேறு என்பது விளங்குகிறது உன்னுடைய புத்தகம், உன்னுடைய வீடு என்று சொல்லும்போது நீயும் புத்தகமும் வேறு, நீயும் வீடும் வேறு ஆதல் போல, நீ என்பது உயிர். உயிருக்கு ஆன்மா என்று பெயர். நீ என்று குறிப்பது ஆன்மா. அவன் என்று குறிப்பதும் ஆன்மா. நான் என்று குறிப்பதும் ஆன்மா. நாங்கள் எல்லோரும் ஆன்மாக்களே. என்னுடைய சிநேகிதன் இறந்து போனான் என்பதன் கருத்தென்ன? என்னுடைய சிநேகிதனாகிய ஆன்மா, தானிருந்த உடம்பினின்றும் நீங்கி விட்டதென்பதே. எனவே, ஆன்மா அழியவில்லை என்பது விளங்குகிறது. உடம்பு அழிந்து போவதை நாம் காண்கின்றோம். ஆன்மாக்களாகிய நாங்கள் ஒரு காலத்துக்குக் காலம் எடுத்துக் கொள்ளும் உடம்பே அழிந்து போவது.


தொடரும்


புதிய பல் மருத்துவமனை
குடும்ப பல் மருத்துவர்



Dr. Vanathy Jeevakumar
டாக்டர் திருமதி வானதி ஜீவகுமார்

29C Dundas Street East
Mississauga, Ont., L5A 1V9
(Hurontario/Dundas)




சகல பல் மருத்துவ சேவைகள்
(Including Braces Implants)
வாரத்தில் ஏழு நாட்கள்

Phone **(905) 281-0273**
Fax: (905) 281-8792




பிரதம விருந்தினர் சைவசமய முறைப்படி வரவேற்கப்படுகின்றனர்.



சிறப்பு விருந்தினர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கபடுகின்றனர்.



கீழ், மத்திய, மேற்பிரிவு மாணவர்கள் பன்னிருதிருமுறை ஓதுகிறார்கள்



பாலர்பிரிவு மாணவர்கள் பஞ்சபுராணம் ஓதுகிறார்கள்